DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.03/2018**

அ.சா.10

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர். பி.விசுவநாதன் | Caste: | |
| Father's Name: | பால்ராஜ் | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 12.01.2026

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து 30.04.2025 அன்று ஓய்வு பெற்று தற்போது இராமநாதபுரத்தில் விசுவா கிளினிக் என்ற பெயரில் மருத்துவ தொழில் செய்து வருகிறேன். நான் கடந்த 12.05.2017ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது கீழக்கரை உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் கீழக்கரை காவல் நிலைய கு.எண். 121/2017 வழக்கில் இறந்துபோன பாண்டி என்பவரது பிரேதத்தை சடல கூராய்வு செய்ய காவலர் எண். 666 பூமி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். நான் 12.05.2017ம் தேதி மாலை 4.45 மணியளவில் சடல கூராய்வு செய்ய துவங்கினேன். மேற்படி காவலர் எனக்கு பிரேதத்தை அடையாளம் காட்டினார். நான் பிரேதத்தை பார்வையிட்டபோது உடல் முழுவதும் விரைப்பு தன்மை இருந்தது. அந்த பிரேதம் நடுத்தர வயது கொண்ட

ஆண்பிணம் மல்லாந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தது. இரண்டு கண்களும் மூடியிருந்தது. இரண்டு கால் கைகளும் விரைப்பு தன்மையுடன் காணப்பட்டது. அவரை பரிசோதிக்கையில் உடல் முழுவதும் 100 சதவீத தீக்காயங்கள் காணப்பட்டது. அவரது நெஞ்சு பகுதியை திறந்தபோது மூச்சு குழாயில் புகைதுகள்கள் காணப்பட்டது. தொண்டை குழாயிலும் நாவடி எலும்பு, இருதயம், நுரையீரல் சரியாக இருந்தது. வயிற்று பகுதியை திறந்து பார்த்தபோது வயிறு காலியாக இருந்தது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் எவ்வித சேதாரமின்றி சரியாக இருந்தது. தலைப்பகுதியை திறந்து பார்த்தபோது கபால எலும்புகளில் முறிவுகள் இல்லை. இரத்த உறைவுகள் இல்லை. உடல் உள்ளுறுப்புகள் இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இரசாயன பகுப்பாய்வின் அடிப்படையில் இறந்த நபர் தண்ணீர் மற்றும் புரோட்டீன் சத்துக்கள் தீக்காயங்களினால் வெளியேறியதால் இறந்திருக்கக்கூடும் என கருத்து தெரிவித்து இறுதி கருத்து வழங்கினேன். நான் தயார் செய்த பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி கருத்து **அ.சா.ஆ.8**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் பிரேத பரிசோதனை செய்த நபரின் அங்கு அடையாளங்களை அறிந்துகொள்ள முடியவில்லை என்றால் சரிதான். தீக்காயங்களினால் அறிந்துகொள்ள முடியவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் பிரேத பரிசோதனை எதுவும் செய்யவில்லை என்றும் அதுசம்பந்தமாக அறிக்கை தரவில்லை என்றும் போலிசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரேத பரிசோதனை செய்ததாகவும், அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சொன்னால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.12 16:28:49 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)